**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**STC.NO-113/2025**

**Dated :02.03.2026**

**Deposition of witness for : P.W.1**

**Cros examination of PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பானுமதி | வயது | : | 40 |
| கணவர் பெயர் | : | **ரமேஷ்** | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | கந்தர்வகோட்டை | தொழில் | : | பியூட்டி பார்லரில் வேலை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1) எதிரியின் வசிப்பிடம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், புதுக்கோட்டையில் வசிக்கிறார். நான் கந்தர்வக்கோட்டையில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எதிரி மீது 2024 ஆம் ஆண்டு இவ்வழக்கினை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என் மீது இந்நீதிமன்றத்தில், STC 7/2023 என காசோலை மோசடி வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என் மீது 2022 ஆம் ஆண்டு கந்தர்வக்கோட்டை காவல்நிலையத்தில், பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் அது பொய்யான புகார் ஆகும். எங்கு வைத்து, யார் முன்னிலையில், எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து, எனது மகள் மற்றும் மருமகன் முன்னிலையில் காலை நேரத்தில் கொடுத்தேன். மேற்படி விபரத்தை எனது அறிவிப்பிலும், புகார் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, பணம் கொடுத்ததாக மட்டும் சொல்லியுள்ளேன்.

2) காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்த போது, வங்கியில் தாக்கல் செய்யப்பட்ட சலான் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருப்பப்பட்ட காசோலையில், வங்கி மேலாளரின் கையொப்பத்திற்கு கீழ் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை

என்றால் நான் காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன். நான் எங்கு வேலை செய்கிறேன் என்றால் கீரனூரில் வேலை செய்கிறேன். எனக்கு மாத சம்பளமா, வார சம்பளமா என்றால் மாத சம்பளம். எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் மருதாந்தலை கிராமத்தில் உள்ள அரசுப்பள்ளியில் ஆய்வகத்தில் வேலை செய்து வருகிறார். எனக்கு மாதசம்பளம் ரூ.7,000/- ஆகும். எதிரியின் கணவர் பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கு எத்தனை குழந்தைகள் உள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் இரண்டு குழந்தைகள் இருப்பதாக சொன்னார், அதில் ஒரு குழந்தை இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். எதிரி யார் மூலமாக எனக்கு அறிமுகம் ஆனார் என்றால் எதிரி பியூட்டி பார்லருக்கு வருவதன் மூலம் எனக்கு அறிமுகம் ஆனார்.

3) எதிரி எனது பியூட்டி பார்லருக்கு வருவதன் மூலமாக எனக்கு அறிமுகம் ஆனார் என்ற விபரத்தை எனது அறிவிப்பிலும், புகார் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி எனது பியூட்டி பார்லருக்கு வரும் போது, அவரது பேக்கில் வைத்திருந்த காசோலையை நான் திருடிக்கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரி மீது பொய்யான காரணங்களைக்கூறி அறிவிப்பு அனுப்பி, அதன் அடிப்படையில் பொய் வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அந்த மன உளைச்சலில் எதிரி அவரது குழந்தையை சரிவர கவனிக்கவில்லை என்றாலும் சரியல்ல, குழந்தைக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி தான் பணம் பெற்றார். வழக்கு காசோலையில், எதிரியின் கையொப்பமும், நிரப்பப்பட்ட விபரங்களும் வெவ்வேறு கையெழுத்துக்களாக உள்ளது என்றால் சரியல்ல. கையெழுத்துக்கள் அவ்வாறு வெவ்வேறாக உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.3 திருப்புதல் குறிப்பாணையில், வங்கி மேலாளரின் கையொப்பத்திற்கு கீழ் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் 13.07.2024 ஆம் தேதி எதிரிக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான்.

4) வங்கி மேலாளரை அழைத்து விசாரணை செய்தால், நான் காசோலையை வசூலுக்கு தாக்கல்செய்தேனா என்பது குறித்து அதே தேதியில் திருப்பப்பட்டதா என்பது குறித்தும் தெரியவரும் என்றால் சரிதான். எனக்கு கந்தர்வக்கோட்டை கோவிலூர் பாரத ஸ்டேட் வங்கியில் வங்கிக்கணக்கு உள்ளது என்றால் சரிதான். எதிரிக்கு புதுக்கோட்டை பாரத ஸ்டேட் வங்கியில் வங்கிக்கணக்கு உள்ளது என்றால் சரிதான். நான் உண்மையில் வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்திருந்தால், எதிரியின் புதுக்கோட்டை வங்கியில் மறுநாள் தான் காசோலையை திருப்பியிருப்பார்கள் என்றால் சரியல்ல. இதுநாள் வரை எனக்கு மாதம் ரூ.7,000/- சம்பளம் என்றால் மேக்கப் செய்ய சென்றால் அதற்கு தகுந்தவாறு வருமானம் கிடைக்கும். எதிரிக்கு கடன்

கொடுத்ததாக சொல்லும் தொகை எனது சம்பளத்திலிருந்து கொடுத்தது இல்லை என்றால் எனது பணம் மற்றும் எனது மருமகனை வெளிநாடு அனுப்புவதற்காக சேர்த்து வைத்திருந்த பணத்தில் இருந்து, குழந்தைக்கு உடல்நிலை சரியில்லை என்று சொல்லிக்கேட்டதால் கொடுத்தேன். மேற்படி விபரத்தை எனது அறிவிப்பிலும், புகார் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரியிடம் இருந்து நிரப்பப்படாத காசோலையை எடுத்து, நானாக நிரப்பி கொண்டேன் என்றால் சரியல்ல. 2023 ஆம் ஆண்டே, நான் பல நபர்களிடம் கடன் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எந்தக்காலத்திலும் என்னிடம் கடன் எதுவும் பெறவில்லை என்றாலும் காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.02 13:53:30 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**